**O.S. No. 77/2025**
**Date :06.02.2026**

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்)
PW. 1 **திரு. சிலம்பரசன்**

**குறுக்கு விசாரணை :**

1. நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 புரோநோட்டை எழுதியது சரண்ராஜ். சரண்ராஜ் அவர் வைத்திருந்த பேனாவால் அதில் கண்டுள்ள எழுத்துக்கள் அனைத்தும் எழுதப்பட்டது. பிரதிவாதி மற்றும் சாட்சிகள் எந்த பேனாவால் கையெழுத்து போட்டார்கள் என்று எனக்கு ஞாபகமில்லை. சாட்சிகளும், பிரதிவாதிகளும் எந்த பேனாவால் கையெழுத்து போட்டார்கள் என்றால் எனக்கு ஞாபகமில்லை. வழக்கு தயார் செய்வதற்கு எனது வழக்கறிஞருக்கு விபரம் சொன்னது நான் தான்.

2. நான் தாக்கல் செய்துள்ள பிராதில் பத்தி 3–ல் ஈடு கடன் பதிவு செய்து கொடுத்துவிட்டு புரோநோட்டை பிரதிவாதி வாபஸ் வாங்கி கொள்வதாக சொன்னதாக நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பத்தி 4–ல் வங்கியில் கடன் வாங்க இருப்பதாகவும், கடன் வந்தவுடன் பணத்தை திருப்பி தருவதாக சொன்னார் என்றும், வீடு கடன் அடமானம் ஏற்பட்டிருந்தால் வங்கியில் பணம் கொடுக்க மாட்டார்கள் என என்னிடம் தெரிவித்ததாக நான் பிராதில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தாவா புரோநோட்டில் உள்ள கையெழுத்து பிரதிவாதியின் கையெழுத்து இல்லை என்றால் சரியல்ல. அந்த கையெழுத்து நேராக போடாமல் கோணலாக போடப்பட்டுள்ளது என்றால் சரியாகத்தான் உள்ளது. கையெழுத்து முத்திரைவில்லையில் நேராகத்தான் உள்ளது.

3. Revenue stamp –ல் மேலே உள்ள செல்வராஜ் என்பவரது கையெழுத்தும், புரோ நோட்டில் உள்ள மற்ற விபரங்கள் பூர்த்தி செய்யப்பட்ட கையெழுத்தும் வெவ்வேறாக உள்ளது என்றால் எந்த பேனாவால் பூர்த்தி செய்யப்பட்டதென்று எனக்கு ஞாபகமில்லை. இரண்டிற்கும் மை வித்தியாசம் உள்ளது என்றால்

சரியாகத்தான் உள்ளது.ரூ. 14 லட்சம் ரூபாய் என் பெயரிலும் எனது மனைவி பெயரிலும் நகைகளை அடமானம் வைத்து கடன் வாங்கினேன் அது அல்லாமல் ரூ.6 லட்சம் ரொக்கமாக இருந்தது இரண்டையும் சேர்த்துதான் நான் பிரதிவாதிக்கு கடனாக கொடுத்தேன்.

4. எந்த வங்கியில் அவ்வாறு ரூ.14 லட்சம் அடமானம் வைக்கப்பட்டது, எந்த தேதியில் வைக்கப்பட்டதென்றால் மார்ச் மாதம் 2024 ஆம் ஆண்டு வங்கியில் அடமானம் வைக்கப்பட்டது, தேதி ஞாபகமில்லை. கடமலைக்குண்டில் உள்ள கனரா வங்கியிலிருந்து தான் ரூ.14 லட்சம் கடன் வாங்கப்பட்டது. அந்தக் கடனை இன்றைய தேதி வரை நான் புதுப்பித்துக் கொண்டு வட்டி செலுத்தி வருகிறேன். இரண்டு பேரிலும் உள்ள கணக்கில் தான் அந்த நகையானது அடமானம் வைக்கப்பட்டது. கனராவங்கி கடமலைக்குண்டு கிளையில் இரண்டு கணக்குகள் எனக்கு ஒன்றும், எனது மனைவிக்கொன்றும் உள்ளது.

5. அந்த கணக்கில் தான் நகை அடமானம் வைக்கப்பட்டு கடன் வாங்கி அதை நான் பிரதிவாதிக்கு கொடுத்தேன். எனது வங்கி கணக்கு தற்போது என்னால் மனப்பாடமாக சொல்ல முடியாது. பிரதிவாதி கடன் கேட்ட காரணத்தினால் அவருக்காக அந்த கடன் வாங்கப்பட்டது. என்ன ஸ்கீமில் கடன் வாங்கினோம் என்று எனக்கு ஞாபகம் இல்லை. மாத, மாதமும் அந்த கடன் தொகை திருப்பி செலுத்த முடியும், வருடா வருடமும் அதை புதுப்பித்துக் கொள்ளவும் முடியும். நான் ரூ.14 லட்சம் வங்கியில் கடன் வாங்கிய விவரம் எனது வங்கி கணக்கை பார்த்தால் தெரியும் என்றால் சரிதான்.

6. நான் நீதிமன்றத்தில் எனது சேமிப்பு கணக்கு விபரப்பட்டியலை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் ட்ரிப்இரிகேசன் நடத்தி வரும் கம்பெனி வங்கி கணக்கில் இருந்து கடன் பணம் எடுத்து கடன் தொகை கொடுக்கவில்லை. அது நடப்பு கணக்கு. கடந்த 23.04.2021–ம் தேதியன்று ரூ.30,00,000/– நாளுக்கு ரூ.1 வட்டி வீதம் பிரதிவாதிக்கு எழுதி வாங்கிக்கொண்டு கடன் கொடுத்தேன் என்றால் சரிதான். அது சம்பந்தமாக

அசலும், வட்டியும் கேட்டு அசல் வழக்கில் 133/2025 என்ற வழக்கு இதே நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

7. அதில் அசல் தொகையை செலான் மூலம் பிரதிவாதி நீரநீதிமன்றத்தில் வைப்பீடு செய்துள்ளார் என்றால் எனது வழக்கறிஞர் மூலம் அந்த விபரத்தை தெரிந்து கொண்டேன். அந்த ஈடு கடனில் கண்ட சொத்தை கொடுத்து அதே தேதியில் வட்டிக்கு பதிலாக உழவடை ஒப்பந்த பத்திரம் எழுதி வாங்கினேன் என்றால் சரியல்ல. 09.08.2021 ம் தேதியன்று ரூ.3 லட்சத்திற்கு வருடம் மற்றும் நாளிற்கு ரூபாய் 1 வீதம் ஒரு ஈடு கடன் பத்திரம் எழுதி வாங்கினேன் என்றால் சரியா சரிதான். அது சம்பந்தமாக தேனி சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 172/2025 தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான்.

8. அதில் அசல் மற்றும் வட்டி சேர்த்து ரூ.4,60,000 நீதிமன்றத்தில் வைப்பீடு செய்துள்ளார் என்றால் எனது வழக்கறிஞர் சொல்லி எனக்கு அந்த விவரம் தெரிந்து கொண்டேன். அதே மாதிரி 22.12.2023 ம் தேதியன்று ரூ. 15 லட்சத்திற்கு மூன்று வருடங்களுக்கு எனது மனைவி கோகிலா தேவிக்கு பெயருக்கு பிரதிவாதி ஈடு கடன் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அது சம்பந்தமாக பிரதிவாதி இதே நீதிமன்றத்தில் அசல் வழக்கு 28/2024 வழக்கு தாக்கல் செய்து அதற்கான வட்டியுடன் சேர்ந்து ரூ.18,74,500/- நீதிமன்றத்தில் வைப்பீடு செய்துள்ளார் என்ற விவரம் எனது வழக்கறிஞர் வாயிலாக தெரிந்து கொண்டேன்.

**<u>நீதிமன்ற கேள்வி</u>**

நான் வருமான வரி செலுத்துகிறேன். 25 லட்சம் எனக்கு வியாபாரம் ஆகும், அதில் எனக்கு சுமார் 10 லட்சம் ரூபாய் போல லாபம் கிடைக்கும். நான் தமிழ்நாடு அரசால் அங்கீகரிக்கப்பட்ட சொட்டுநீர் பாசனத்திற்கான விற்பனை முகவர். எனக்கு ஒரு விவசாயிக்கு சொட்டுநீர் பாசனம் ஏற்படுத்திக் கொடுத்தால் 16% எனக்கு சர்வீஸ் கமிஷன் அரசாங்கத்தால் வரும்.

**<u>குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி</u>**

9. ரூ.14 லட்ச ரூபாய் நான் வங்கியில் எனது நகைகளை வைத்து அடமானம் வாங்கியது. எனது தொகை எவ்வளவு எனது மனைவி வங்கி கணக்கிலிருந்து வாங்கிய கடன் தொகை எவ்வளவு என்றால் எனக்கு சரியாக ஞாபகமில்லை. நான் வாங்கிய ரூ.14 லட்சம் என்பது விவசாய கடனுக்காக வாங்கியது என்றும், நகை அடகு வைத்து கடன் வாங்கவில்லை என்றால் சரியல்ல. எனது மனைவி பெயருக்கு வேறு சொத்துக்கள் எதுவும் இல்லை இந்த மாதம் மட்டுமே நான் ஒரு சொத்து வாங்கினேன்.

10. நானும் எனது மனைவியும் ஒன்றாகத்தான் ஒரே சொட்டுநீர் பாசனம் தொழிலை செய்து வருகிறோம் எனவே எனது மனைவிக்கு தனியாக வருமானம் எதுவும் கிடையாது என சொல்வது தவறு. எனக்கு LS பைப் மற்றும் ட்ரிப்ளிகேஷன் தவிர வேறு தொழில் கிடையாது என்றால் சரியல்ல. நான் சொந்தமாக பைப் விற்பனையும் செய்து வருகிறேன். நான் எல்லா கம்பெனியில் டீலராகவும் உள்ளே நான் அந்த டீலர் தொழிலும் செய்து வருகிறேன். அந்தந்த கம்பெனி பெயரிலும் நான் டீலர்ஷிப் எடுத்துள்ளேன். அவ்வாறு வருமானம் வருவதை காட்டுவதற்கான ஆவணம் எதுவும், நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.6 Income Tax return acknowledgement நான் தற்பொழுது கூறிய வருமான விபரங்களை இந்த ஆவணத்தில் காட்டவில்லை என்றால்என்றால் சரியல்ல.

11. நான் எனது சொந்த வருமானங்களை அதில் காட்டியுள்ளேன் விவசாயிகளுக்கு பைப் பதித்த வகையில் வரும் வருமானங்கள் அவர்கள் கணக்கில் வரும் என்பதால் அதை எனது வருமான வரி கணக்கில் காட்ட முடியாது பில் அவர்களது பெயரில் வரும். வருடத்திற்கு நான் மூன்று கோடி ரூபாய் அளவிற்கு வியாபாரம் செய்வேன். அதற்கு எனக்கு 14 சதவீதம் சர்வீஸ் கமிஷன் கிடைக்கும். வா.சா.ஆ.7 L.S பைப்ஸ் அண்ட் ட்ரிட்இரிகேஷன் கனரா வங்கி கடமலைக்குண்டு–ன் கணக்கு பட்டியல் என்றால் சரிதான். எனது

கம்பெனி தொடர்பான எல்லா வரவு, செலவுகளும் இந்த வங்கி கணக்கு மூலமாகத்தான் நடைபெறும் என்றால் சரிதான். 14 சதவீதம் எனக்கு டீலர்ஷிப்பில் இருந்து வரும் கமிஷன் மேற்கண்ட கணக்கு பட்டியலில் உள்ளதா என்றால், 14 % வந்த விபரங்கள் கணக்கு பட்டியலில் இருக்கும். சம்பந்தப்பட்ட கம்பெனியில் இருந்து எனக்கு அந்த கமிஷன் தொகையை போடுவார்கள்.

12. நான் பிரதானமாக ஒரு கம்பெனியில் இருந்து எனக்கு கமிஷன் தொகை வரும். அந்த கம்பெனியின் பெயர் ரூவிலிஸ் இரிகேசன் இந்தியா பிரைவேட் லிமிடெட் என்ற கம்பெனி. நான் சொல்லக்கூடிய அளவிற்கு நான் தாக்கல் செய்த வங்கி கணக்கு பட்டியலில் வரவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் நான் சொல்வது போல் 29.03.2024 ஆம் தேதியன்று தாவா புரோநோட்டை பிரதிவாதி எனக்கு எழுதி கொடுக்கவில்லை என்றும், ரூ.20,00,000/- க்கு அசல் தொகை அவரிடமிருந்து வாங்கவும் இல்லை என்றும், அதில் உள்ள கையெழுத்து பிரதிவாதி கையெழுத்தல்ல என்றால் சரியல்ல. ஏற்கனவே நான் பிரதிவாதியிடம் அவரது சொத்துக்களை கடந்த 07.09.2022 ம் தேதியன்று ரூ.1,50,000 –க்கு கிரையம் பேசி அட்வான்ஸ் தொகை ரூபாய் ஒரு லட்சம் கொடுத்ததாக கிரையம் பேசப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

13. பின்னால் 22.12.2023 ம் தேதியன்று அது ரத்து செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணம் பி.வா.சா.ஆ.1 மற்றும் 2. செல்வராஜுக்கு நான் ஈடு கடன் தான் வட்டிக்காக கொடுத்தேன் என்றும் ஏற்கனவே சொல்லப்பட்ட அனைத்து தொகைகளும் பிரதிவாதியால் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றும், எனது மனைவி கோகுலா பெயரிலும் வாங்கிய கடனும் பிரதிவாதி நீதிமன்றத்தில் முறையாக வைப்பீடு செய்துள்ளார் என்றும், ஈடு கடன் பத்திரத்தில் கண்டுள்ள சொத்தை எப்படியாவது அபகரித்து கொள்ளவேண்டுமென்பதற்காக போலியாகவும், மோசாடியாகவும் இந்த தாவா புரோநோட் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதென்றால் சரியல்ல. தாவா புரோநோட்டில் பிரதிவாதியின் கையெழுத்து சரிபார்ப்பதற்கு ஆய்விற்கு உட்படுத்த எனக்கு

ஆட்சேபணையில்லை. வழக்கு சொத்தை பொறுத்து பிரதிவாதி எந்த தொகையும் கொடுக்க கடமைப்பட்டவரல்ல என்றும், செலவு தொகையுடன் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு தொடர்பான ஆவணங்கள் அனைத்தும் வழக்குக்காக ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. தாவா புரோநோட்டில் உள்ள கையெழுத்து பிரதிவாதி உடையதல்ல என்றால் சரியல்ல. அந்த கையெழுத்துக்கள் மேலே சொன்ன ஈடு கடன் பத்திரத்தில் உள்ள கையெழுத்துக்களை பார்த்து போலியாக என்னால் உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.02.06 17:56:53 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
தேனி.